1975 அக்டோபர் 30]

பட்டிருப்பது ஒரு முறையான காரணமாகும். அந்த அலுமினியக் கம்பிகளை மாற்றி செப்புக் கம்பிகளைப் போட்டால் எவ்வளவுதூரம் வேண்டுமானாலும் கொண்டு போகலாம் லைன் லாஸ் வராது என்கிறார்கள். லைன் லாஸ் ஏற்படுவதற்கு இது ஒரு காரண மாகும். இதில் திருட்டுகள் ஏற்படுவதால் அதை தனியார் மட்டும் செய்கிறார்களா அல்லது சம்பந்தப்பட்ட இலாகா வினருக்கும் தொடர்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மின் இழப்புக்குக் காரணம் திருட்டு என்று சொல்லப்படுகிறது. அந்தத் திருட்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் அதிகமாக நடப்ப தாகச் சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒத்துழைப்பு தந்து இந்தத் திருட்டுக்களைக் குறைக்க உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

பர்கூர் மலைப்பகுதியில் வேளாண்மைக் கடன்கள்.

* 137 வினு—திரு. ஏ. எம். நடராசன்: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பவானி வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் காபி, தேயிலை, உருளைக்கிழங்கு மற்றும் காய் கறிகள் பயிரிடும் அப்பகுதி மக்கள் அரசு உதவி கோரி அரசுக்கு விண்ணப்பித்துள்ளனரா?

(இ) அதன்மீது அரசு எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) & (இ) பர்கூர் மலைப் பகுதி மேம்பாட்டிற்காக ரூ. 28. 7 லட்சத்தில் திட்டம் ஒன்றைத் தயாரித்து கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பினுர். அதை வேளாண்மை இயக்குநர் பரிசீலனை செய்து சில திருத்தங்கள் தேவை என்று பரிந்துரை செய்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியுள்ளார். திருத்தப்பட்ட திட்டம் எதிர்பார்க்கப்படுகிறது.